கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 06.11.2024 அ.வ.எண். 736/2010. பி.வா.சா. 1. மாரியம்மாள், க/பெ, கிருஷ்ணசாமி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5 வது பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

5 வது பிரதிவாதியை பொறுத்து பி வா சா 1ல் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 6,7 வது பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

6, 7 பிரதிவாதிகளைப் பொறுத்து பி வா சா 1ல் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் எனது மகன் நாச்சிமுத்து அனைவரும் ஒரே குடும்பமாகத்தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான்.,கடந்த 8 வருடமாக நாங்கள் ஒக்கிலிபாளையத்தில் தான் குடியிருக்கிறோம் என்றால் ஒக்கிலிபாளையம் மற்றும் கோபி, கொண்டம்பட்டி ஆகிய ஊர்களில் குடியிருந்து வருகிறோம். 1981 ல் பல முயற்சி செய்து இந்த சொத்து வாங்கப்பட்டதாக கூறியுள்ள நிலையில் அது பற்றி என்னுடைய எதிர் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தண்டாயுதபாணி ரைஸ்மில்லிற்கு நாச்சிமுத்து கவுண்டர் பெயரில் தான் உரிமம் இருந்தது என்றால் சரிதான்,. நாச்சிமுத்து கவுண்டரின் வாரிசுகள் தான் 1 முதல் 4 வாதிகள் மற்றும் எனது கணவர் என்றால் சரிதான்.

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

2) நாச்சிமுத்து கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு ரைஸ் மில்லின் உரிமம் நாச்சிமுத்து கவுண்டர் சன்ஸ் என்று இருந்தது என்றால் சரிதான். தண்டாயுதபாணி ரைஸ்மில் சொத்து எனது கணவருக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. நான் எனது கணவர் சடையப்ப கவுண்டர், மற்றும் பழனி கவுண்டர் , அருணாசல கவுண்டரை சந்தித்து தாவாசொத்தை விலைபேசி 08.06.1981 அன்று முடித்தோம் என்ற விவரத்தை எனது எதிர் வாதத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி தேதியில் செண்ட் ரூ.1000 என்று பேசி முடித்து முன் தொகையாக ரூ.5001 கொடுத்ததாகவும் வாய்மொழி ஒப்பந்தமாக 6 மாத காலம் கிரயத்திற்கு வைக்கப்பட்டதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரத்தை எனது எதிர்வாதத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட சங்கதிகளை எனது எதிர் வாதத்தில் குறிப்பிடாததற்கு காரணம் வழக்கிற்காக நான் தற்போது பிரமாண பத்திரிக்கையில் பொய் சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

3) வாதி தாக்கல் செய்துள்ள வா சா ஆ 1ல் கிரயத் தொகை மொத்தம் ரூ. 850/- என்று குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கிரயம் எழுதிய சமயத்தில் வாதிகள் அவர்கள் பெயரிலும் கிரயம் எழுதச் சொன்னதாக நான் கூறியுள்ள எதிர்வாதம் பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1 முதல் 4 வாதிகள் மற்றும் எனது கணவர் பேசி முடித்து கூட்டாக வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. எனது எதிர்வாதத்தில் 1 முதல் 4 வாதிகள் கிரயம்

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

சமயத்தில் பணம் தரவில்லை என்றும் பிற்காலத்தில் பணம் தருவதாக உறுதி மொழி ஆவணம் எழுதிக் கொடுத்ததாக கூறியுள்ள நிலையில் அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 4 வாதிகள் உறுதிமொழி ஆவணம் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் அதனால் தான் நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) எனது பிரமாண வாக்குமூலத்தில் கிரயத் தேதியிலிருந்து 3 வருடங்களுக்குள் தொகை தருவதாக கூறியுள்ள நிலையில் அது குறித்து எனது எதிர்வாதத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது கணவர் மற்றும் நான் தனிப்பட்ட முறையில் சேர்ந்து வாங்கிய சொத்து என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல,. 1 முதல் 4 வாதிகள் மற்றும் எனது கணவர் சேர்ந்து வாங்கியதால் தான் 5 பேர் பெயரில் கிரயப் பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மாடர்ன் ரைஸ்மில் எனது கணவர் கட்டினார் என்று கூறியுள்ள நிலையில் தாவா சொத்தானது கிரய தேதியில் இருந்து காலியிடமாகத்தான் உள்ளது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது கணவர் பல லட்சங்கள் செலவு செய்து ரைஸ்மில் கட்டினார் என்று கூறியிருப்பது வழக்கிற்காக நான் சொல்லும் பொய் என்றால் சரியல்ல.

5) 09.02.1993 தேதியில் 4 ம் வாதி சந்திரன் அவர் மற்றவர்களிடம் வாங்கிய கடனை அடைப்பதற்காக என்னிடமிருந்து ரூ.1லட்சம் வாங்கி அதன் பேரில் அடமானப் பத்திரம் எழுதி

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி அடமானப் பத்திரத்தில் தாவா சொத்தில் 4 வாதிக்கு பாத்திய உரிமை உள்ள 1/5 பங்கையும், இதர சொத்துக்களில் உள்ள 1/5 பங்கையும் ஈடு காட்டிதான் அடமானப் பத்திரம் எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. 4 ம் வாதி பணம் கொடுக்காததால் பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் மேற்படி அடமானப் பத்திரத்தின் அடிப்படையில் அசல் வழக்கு எண். 15/2010 வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை . நான் ஞாபகமில்லை என்று கூறுவது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) இந்த தாவாவை 1 முதல் 4 வாதிகள் பாகம் கேட்டு தாக்கல் செய்ததால் மேற்படி அ.வ.எண்,. 15/2010 ஐ கடந்த 14.02.2011 ம் தேதியன்று தொடர்ந்து நடத்தாமல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தில் 1 முதல் 4 வாதிகள் மற்றும் எனது கணவருக்கு தலா 1/5 பங்கு உரிமை உள்ளதால் தான் அடமானப் பத்திரம் எழுதப்பட்டது என்றும் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டது என்றும் வழக்கிற்காக நான் தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல,. எனது எதிர்வாதத்தில் தாவா சொத்து எனக்கும் எனது கணவருக்கும் மட்டும் பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆதரவு எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கும் எனது கணவருக்கும் மட்டும் பாத்தியப்பட்டது என்று கூறுவது வழக்கிற்கான பொய் என்றால் சரியல்ல.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி